THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

DECEMBER, 1953.

மதுரை-ராமநாதபுர அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

டிசம்பர், 1953.

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை.

பத்திராதிபர்:—A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை.

உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.

மானேஜர்:—கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211 தெற்கு மாரட் வீதி, மதுரை.

பத்திரிகைக் கமிற்றி:—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.
,, தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.
,, தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.
,, ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.
,, A. சாமுவேல் ஐயர், பசுமலை. (தலைவர்.)

முக்கிய பொருளடக்கம்.

1. அத்தியட்சரின் கடிதம்.
2. திருச்சபைச் செய்திகள்.
3. பிரசங்கக் குறிப்புகள்.
4. சிறுவர் பாகம். (ஆராதனையும், கதைகளும்)
5. கி. மு. சங்கப் பொருட்கள்.
6. இயேசுவின் ஜெபப் பள்ளி.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XV   பசுமலை, டிசம்பர் 1953   இலக்கம் 2

வருடசந்தா: 1 ரு. 8 அணா. தபாற்கூலி உட்பட.

தல்லாக்குளம்,
மதுரை,
நவம்பர் 22, 1953.

அத்தியட்சரின் கடிதம்

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே:—

இந்த மாதத்தின் ஆரம்பத்தில் குண்டூரில் நடந்த சுதேச கிறிஸ்தவ சங்க மகா நாட்டிற்குப் போயிருந்தேன். இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் சுமார் 160 பிரதிநிதிகள் வந்திருந்தனர். அங்கிருந்த கிறிஸ்தவக் கூட்டுறவும் ஆலோசனைக்கூட்டங்களும் உற்சாகமளித்தன. சுயேட்சை ஊழியர் பயிற்சிக்கான முயற்சிகள் பல சபைகளில் நடந்து வருகிறதென்று அறிந்து அதிக சந்தோஷப்பட்டேன். இந்த ஊழியத்தில் கைவிடப்படும் பல புதிய முறைகளை அறிந்தேன். கிராமசபைகளைக் கண்காணிக்கும்படி சுயேட்சை ஊழியரான குருமாரை அபிஷேகம் செய்யவேண்டுமென்ற பிரச்சினையைப் பல சபைகள் ஆழ்ந்து யோசித்து வருகின்றனவென்றும் தெரிந்துகொண்டேன்.

கடந்த வருடங்களை விட இந்த வருடத்தில் அநேக வாலிபர் திடப்படுத்தல் பெற முன் வருகிறார்களென்றறிந்து மகிழ்கிறேன். இந்த மாதத்தில் கம்பம், ராஜபாளையம், சிரிவிலிப்புத்தூர், சிவகாசி பாஸ்டரேட்டுகளில் திடப்படுத்தல் நடத்தும் சிலாக்கியம் கிடைத்தது. வாலிபரை உண்மையும் உத்தமுமான திருச்சபை அங்கங்களாக்கும் ஊழியத்தை விட முக்கியமான தொன்றில்லை. என் ஊழியத்தில் இதை நான் பெரியதோர் சிலாக்கியமாகக் கருதுகிறேன். சபையின் முழு அங்கங்களாக வாலிபரை ஆயத்தப்படுத்துவதில் சிரத்தை எடுத்த எல்லா குருமாருக்கும் உடன் ஊழியருக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

நவம்பர் 15ம்-உ ஆலயங்களில் வாசிக்கும்படி குருமாருக்கு அனுப்பிய சுற்றுகடிதத்தின் திட்டங்களை நாம் தொடர்ந்து செய்வதற்கனுகூலமாகவும், அடுத்த ஆறு மாதங்களில் நாம் செய்ய வேண்டிய ஊழியத்தை வகுக்கும்படியாகவும் ஒவ்வொரு லோக்கல் கவுன்சில்களிலுமுள்ள குருமாரைச் சந்தித்தும் வருகிறேன். இதற்காக உங்களுடைய ஜெபம் தேவை. நமது அத்தியட்சாதீனச் சபைகள் யாவும் ஆவியின் எழுப்புதலுக்காக ஜெபிக்கவேண்டு மென்பதும், அருப்பின் பண்டிகை காலங்களில் ஸ்தோத்திரம், தற்பிரதிஷ்டை, காணிக்கை படைத்தல் ஆனவற்றிற்காகப் பிரத்தியேகக் கூட்டங்கள் நடைபெறவேண்டுமென்பதும் எனக்கிருக்கும் பேராவல்.

புதிய கல்வித்திட்டத்தின்படி நமது கிராமப்பள்ளி ஆசிரியர்கள் வேதத்தை ஒழுங்காய்ப் போதிப்பதற்குப் போதிய அவகாசமில்லை என்று சொல்லும் கஷ்டத்தை உணருகிறேன். என்றாலும் ஒழுங்காய் இந்த ஊழியம் நடைபெறவேண்டும என்பதை வற்புறுத்த விரும்புகிறேன். காலையிலும் மாலையிலும் இது நடைபெறாவிட்டாலும் தினந்தோறும் அரை மணி நேரம் இதற்காகச் செலவிடவேண்டும். இதைச் செய்யத் தவறினால் நமது பள்ளிகள் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கம் தவறும். மேலும் நம்மிடத்தில் உள்ள விலைமதிப்பற்ற ஈவை கொடுக்கத் தவறுகிறவர்களாவோம்.

கர்த்தருக்குச் சித்தமானால் டிசம்பர் மாதம் 16ம்-உ 10 மணிக்கு சிவகாசி ராக்லாண்டு ஞாபகார்த்த ஆலயத்தில் கனம் கிரப் ஐயர் அவர்கள் பிரஸ்பித்தராக அபிஷேகம் பண்ணப்படுவார். அவரை உங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுங்கள்.

இதை நீங்கள் வாசிக்கும்போது கிறிஸ்து ஜயந்தி கொண்டாட்டத்திற்காக ஆயத்தப்படுவீர்கள். வல்லமையுள்ள கடவுள் உலகை மீட்க எப்படி ஒரு சிறு பாலகனாய்ப் பிறந்தார் என்பதை மறுபடியும் நினைப்போம். நமது பெருமை, தன்னையே முக்கியப்படுத்திக்கொள்ளல், மனித பெலத்திலும் செல்வாக்கிலும் நம்பிக்கை, கடவுளின் இரகசிய வேலையில் நமக்குள்ள குருட்டாட்டம், முதலியன பெத்தலேகம் தொழுவத்தின் முன் கடிந்து கொள்ளப்பட்டு வெட்கப்படுத்தப்படுகின்றன. இந்த வருடத்தில் அவருடைய பிள்ளைகளாய் அவருடைய மாட்டுத் தொழுவத் தொட்டிலண்டை வந்து அவரை இரட்சகராக ஏற்கவும் அவரில் உண்மையான கடவுளின் பிள்ளைகளாய் விளங்கவும் அருள்புரிவாராக உங்களனைவருக்கும ஆசீர்வாதமான கிறிஸ்து ஜயந்தியைக் கடவுள் கடாட்சிப்பாராக.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்

டிசம்பர்	9	தெற்கு லோக்கல் கவுன்சில் குருமார் கூட்டம்.
	12—14	போடிநாயக்கனூர் திடப்படுத்தல்.
	16	சிவகாசி குருவபிஷேக ஆராதனை.
	19—21	தேவகோட்டை திடப்படுத்தல்.
	21, 24, 25, 27	மதுரை—திவ்விய பொறுமையின் ஆலயம்.
	28—29	இரட்சண்யபுரம்—பெண்கள் ஊழியர் ஆவிக்குரிய கூட்டம்.
	31 ஜனு. 1	மதுரை—திவ்விய பொறுமையின் ஆலயம்.

திருச்சபைச் செய்திகள்

1. சபையின் திருகாட்சிகள்.

டிசம்பர்	6	அட்வெந்து ஞாயிறு 2. வேதாகம ஞாயிறு.
,,	13	அட்வெந்து ஞாயிறு 3.
,,	20	,, ,, 4.
,,	25	கிறிஸ்து ஜயந்தி.
,,	26	பரி. ஸ்தேவான் திருநாள். கிறிஸ்தவக் குடும்பப் பண்டிகை.
,,	27	கி. ஜனன திரு. பின் ஞாயிறு 1. பரி. யோவான் திருநாள்.
,,	28	குற்றமில்லாப் பாலகர் திருநாள்.
ஜனவரி	1	நவவருடம். விருத்த சேதனத் திருநாள்.
,,	3	கி. ஜனன திரு. பின் ஞாயிறு 2.
,,	6	பிரசன்னத் திருநாள்.
,,	10	,, ,, பின்ஞாயிறு. 1
,,	17	,, ,, 2
,,	24	,, ,, 3
,,	25	பரி. பவுல் குணப்பட்ட திருநாள்.
,,	31	பிரசன்னத் திரு. பின். ஞாயிறு 4.

2. அகில இந்திய கிறிஸ்தவ முயற்சி சங்கம், ஜபல்பூர் அக்ட். 15—18.

இம்மகாநாட்டிற்கு 300 பிரதிநிதிகள் வந்திருந்தனர். பெரும் பாலோர் வாலிபர். சபையில் இச்சங்கத்திற்கு ஓர் இடம் உண்டு என்ற நிச்சயத்தை இவர்கள் நடந்த ஆலோசனைக் கூட்டங்களில் தெளிவுபடுத்தினர். கிறிஸ்தவத் தொகுதிகளில் ஒன்றோடு இந்த இயக்கம் சம்பந்தப்படாமல் அகில உலகத்திற்கும் எல்லாச் சபை களுக்கும் பொதுவாக, சபை ஐக்கியத்தில் இவ்வியக்கம் அநுகூல மானதோர் சாதனமாய் விளங்கிற்றென்பது வெளிப்படை. "கிறிஸ்துவோடுகூட புதுப்பித்துக்கட்டல்" என்பது மகாநாட்டின் பொருள். அதாவது மனிதன், தேசம், சபை புதிதாகக் கட்டப்பட வேண்டும்.

இந்தியாவிலிருந்தும் உலகத்தின் பலபாகங்களிலிருந்தும் பல பெரியார்கள் வந்து சங்கம் வளர்ந்து உழைத்து பலன் கொடுக்கத் தக்க ஆவிக்குரிய ஆலோசனைகளைக் கூறினர்.

கி.மு. சங்கத் தலைமைக் காரியாலயம் ஜபல்பூரிலிருக்கவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியது. தலைவரும், பொதுக்காரியதரிசியும் வாஷிங்டனில் 1954ல் நடக்கும் அகில உலக கி.மு. மகாநாட்டிற்கு இந்திய கி.மு. சங்கப் பண உதவியின்றி போய்வரலாம். 1956ல் இம் மகாநாடு இந்தியாவில் கூடவேண்டுமென்ற அழைப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது. 1954-ம் வருடத்திற்கு பின்வரும் உத்தியோகஸ் தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர்—**கனம் ஜே. ஏ. ஜேக்கப் ஐயர்,** திருவனந்தபுரம்.

உபதலைவர்—**கனம் ஈ. தீகிக்கு ஐயர்,** வெல்லூர்.

பொதுக்காரியதரிசி—**கனம் ஈ. எவ். ஆல்பர்ட் ஐயர்,** ஜபல்பூர்

பொக்கிஷதார்—**ஸ்ரீ ஜேம்ஸ் ஐசக்,** வெல்லூர்.

3. இந்திய சுதேச மிஷனரி சங்கம்.

தென் தமிழ்ப் பிரதேசம் அறிவிப்பு

இந்திய சுதேச மிஷனரி சங்கத்தின் தென் தமிழ்ப் பிரதேச வருஷாந்திர மகாநாடு 1953-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம தேதி முதல் 30 வரை திருச்சிராப்பள்ளியில் நடைபெறும். மகா கனம் தார்ப், திருச்சி அத்தியட்சர், அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பார்கள்.

சங்கத்தின் ஆதரவுக்கென்று ஒரு விற்பனை விழாவும் நடத்தப் படும். விழாவுக்கென்று பொருட்களை ஆயத்தஞ்செய்யவும், மகா

நாட்டுக்காக பிரதிநிதிகளை அனுப்பவும், ஒழுங்காய் ஜெபிக்கவும், கிளைச் சங்கங்களையும், சபைகளையும், பள்ளிக்கூடம், மாணவர் விடுதி முதலிய ஸ்தாபனங்களையும் தாபந்தமாய் அழைக்கிறோம். கூடுதல் விவரங்களுக்கு எழுதுங்கள் என்று கனம் ஞானதாசன் ஐயர், பொதுக்காரியதரிசி, (செய்யூர்) எழுதுகிறார்.

4. உலக ஓய்வுநாள் பள்ளிக்கூட தினம்-1—11—53.

பசுமலை, மதுரையிலுள்ள 15 ஓய்வுநாட் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பாலியரும் பெரியோரும் மதுரை அமெரிக்கன் காலேஜ் சபாமண்டபத்தில் இத்தினத்தைக் கொண்டாடினர். வேதப் பாடசாலையைச் சேர்ந்த கனம் உவைட் அம்மாள் தலைமை வகித்தார்கள். இவ்வியக்கத்தை ஆரம்பித்த கனம் ராபர்ட் ரேக்ஸ் என்பவரின் சரித்திரம் பசுமலை ஓய்வுநாட்பாடசாலை அங்கத்தினரால் நடித்துக் காட்டப்பட்டது.

ஓய்வுநாள் பாடசாலைப் பரீட்சையில் தேறி பதக்கம் பெற்ற ஐந்து மாணவிகளைத் தலைவர் பாராட்டிப் பேசினார். வேதம்படிக்க ஓய்வுநாள்பாடசாலைகள் இக்காலத்தில் எவ்வளவு அவசியம் என்பதும் வற்புறுத்தப்பட்டது என்று இளைஞர் ஊழியர் கனம் ஜானி டேவிட் எழுதுகிறார்.

இக்கொண்டாட்டம் நடந்து அத்தியட்சாதீனத்தின் சபைகளில் நடைபெற்றதெனப் பல அறிக்கைகள் வந்துள்ளன. எல்லாவற்றையும் பிரசுரிக்க முடியாததற்காக வருந்துகிறோம்.

5. சாட்சியாபுரத்தில் பெண்களின் ஆவிக்குரிய கூட்டம்.

அங்குள்ள மிஷனரி அம்மாள்மாருடைய உதவியால் பெண்களுக்குள் சிறந்த ஊழியம் நடைபெறுகிறது. சுயேட்சை ஊழியரான பெண்களும், சபைப் பெண்களும் கூடி ஜெபம், வேத ஆராய்ச்சி, தியானம் முதலியவற்றில் இருநாட்கள் செலவிட்டனர். முக்கியமாய் சுயேட்சை ஊழியம கிறிஸ்தவர்களுக்குள்ளும் புற மதஸ்தருக்குள்ளும் எப்படிச் செய்வதென்று ஆலோசனை கூறப்பட்டது. அனுபவ சாட்சியும் பிறருக்கு உதவியாயிருந்தது. இப்பிரதிநிதிகள் தங்கள் செலவைத் தாங்களே பார்த்துக்கொண்டார்கள். கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவ விருப்பம் காட்டும் புறமத நண்பர்களுக்குள்ளே தொடர்ந்து ஊழியம் செய்துவருவது குறிப்பிடத்தக்கது என்று கனம் பிரான்சிஸ் தைரியம் அம்மாள் எழுதுகிறார்கள்.

6. அகில உலக ஸ்திரிகள் ஜெபநாள்.

இந்த நாளுக்குரிய தமிழ் ஆராதனை ஒழுங்கு அச்சிலிருந்து ஜனுவரி 1௳ வெளிவரும். இதன் விலை 100 பிரதிகளுக்கு ரூ. 2-8-0. சிறுவர்களுக்குரிய ஆராதனை 100 பிரதிகளுக்கு ரூ. 1-0-0 என்று கனம சாண்டிலர் அம்மாள் கொடைக்கானலிலிருந்து எழுதுகிறார்கள்.

பிரசங்கக் குறிப்புகள்

(கனம் இ. இ. உவைட் ஐயர், வேதப்பாடசாலை, பசுமலை).

பிரசங்க வாக்கியம்: பரி. லூக்கா 2 : 9-10.

கிறிஸ்து ஜயந்தி நாளை உலகத்திலுள்ள சகல கிறிஸ்தவர்களும் கொண்டாடுவார்கள். ஏனென்றால் சகலரும் பாவம் செய்து தண்டனைக்குள்ளவர்களாயிருந்தபோது கடவுள் தாமே அந்தத் தண்டனையை சுமந்து இரட்சிப்பின் சந்தோஷத்தை அளிக்க அவதாரஞ் செய்தார். இந்த தேசத்திலுள்ள அநேகர் தீபாவளி நாளில் தீபங்களைக் கொளுத்துகிறார்கள். வீடு, கோயில் முதலிய இடங்களை தீபங்களால் அலங்கரிக்கிறார்கள். அதோடு பிறர் சந்தோஷப்படும்படி வெகுமதிகளை அனுப்புகிறார்கள்.

கிறிஸ்மஸ் நாள் காலையில் ஆராதனைகளும், பஜனைகளும், பிரசங்கமும் நடைபெறும். ஆனால் அந்த நாளின் விசேஷித்த கருத்தை கிறிஸ்தவ தொண்டர்கள் சரியானபடி விளங்கிக்கொண்டார்களோ என்பது சந்தேகம்.

அநேகர் அதை ஒரு சடங்காக மாத்திரம் பாவிக்கிறார்கள். அதை ஒரு பரிசுத்த தினமாக எண்ணி அனுசரிக்கிறதில்லை. லூக்கா 2 : 9-10ஐ நாம் சரியானபடி வாசித்துத் தியானிப்போமானால் மூன்று மேலான சத்தியங்கள் நமக்குச் சிறந்து விளங்கும்.

1. இயேசுக்கிறிஸ்து உலகத்திலுள்ள எல்லா ஜாதிகட்கும் கடவுளால் உண்டான பரம ஒளி.

இயேசுபாலகன் பிறந்த அவ்வேளையில் கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது. பிரகாசம் என்ற பதம் வெளிச்சத்துக்குரிய பதம். இயேசுவானவர் உலகத்துக்கு ஒளி என்பது அந்த வாசகத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆம் பயம், சஞ்சலம், குடும்பக்கவலை, பகை, பேராசை, வஞ்சனை, சண்டை முதலிய தீமைகள் நிறைந்த இவ்வுலகில் இப்பேர்ப்

பட்ட அந்தகாரத்தை உலகினின்று முற்றிலும் நீக்குவதற்கு மெய் வெளிச்சமாகிய நமது ஆண்டவர் பிறந்தார்.

தீபாவளி காலத்தில் தங்கள் சுவாமி பயங்கரமான ஒரு பூதத்தை ஜெயித்ததற் கடையாளமாக நமமுடைய நாட்டார் தீபங்களைக் கொளுத்திக் காட்டுகிறதுபோல் பாவ நாசகராகிய இயேசுபாலன் பிறந்திருக்கிறாரென்பதை கிறிஸ்தவர் யாவரும் இந்த சுவிசேஷத்தின் மூலம் எல்லா மக்களுக்கும் காண்பிக்க வேண்டியவர்கள்.

2. எல்லா ஈவுகளிலும் இயேசுகிறிஸ்துவே கடவுள் உலகத்துக் கருளிய அதிக அருமையுள்ள ஈவு.

கிறிஸ்து ஜயந்தி தினத்தில் சாதாரணமாக அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் தங்கள் பந்துக்களுக்கும், சிநேகிதர்களுக்கும் பலவித கிறிஸ்மஸ் கார்டுகளை அல்லது விலைஉயர்ந்த பொருட்களைக் கொடுத்து வருகிறார்கள். வெகுமதிகளை வாங்குவதும் கொடுப்பதும் உண்டு. ஆனால் வாங்குவதைப்பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் என்ற நம் ஆண்டவரின் மொழிகளின் உட்கருத்தை எத்தனை கிறிஸ்தவர்கள் சரியாய் விளங்கினவர்கள்? அந்தச் சத்தியத்தைத தங்கள் அன்றாடக வாழ்க்கையில் அசட்டை பண்ணி வருகிறவர்கள் அநேகர்.

நீ தேவனுடைய ஈவை அறிந்திருந்தாயானால் நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய் என்று இயேசுநாதர் யோவான் 4 : 10-ல் கூறியபடி அவர்கள் பரம ஈவாகிய இயேசுவைத் தந்தருளிய பரம பிதாவைப்பற்றி கிறிஸ்மஸ் சமயத்தில் சிந்திப்பது மிகவும் அவசியம்.

ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்கு சொத்து இருந்தாலும சரி இல்லாவிட்டாலும் சரி கிறிஸ்து ஜயந்திக்காலத்தை தகுந்தவாறு அனுசரிக்க விரும்பினால் தன்னாலியன்றமட்டும் அவன் சொத்தில்லாத மற்றவர்களுக்கு விசேஷமாக ஊர்களில் பஞ்சத்தினாலும் மற்ற கஷ்டத்தினாலும துக்கத்தினாலும் வருந்துகிற ஏழை மக்கள் பல பேர்களுக்கு ஏதாவது பொருளைக்கொடுத்து அல்லது ஏதாவது உதவி செய்து வரவேண்டும். அப்படிச் செய்வதில் நாம் தேவனுடைய மக்களாகச் சிறந்து விளங்குவோம்.

இதை நாம் நினைக்கும்போதெல்லாம் "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி" என்று ஓயாமல் நம் இதயத்தில் பாட்டுப்பாடி அவரைத் துதிப்போமாக.

கிறிஸ்மஸ் தினத்தின் விசேஷித்த கருத்தை நாம் எவ்வாறு காண்பிக்கலாம்: பரிசுத்த பேதுரு அப்போஸ்தலர் 4 : 20-ல் சொன்னபிரகாரம் இந்தப்பரம ஈவைப்பற்றி மற்றவர்களுக்கு சொல்லாமலிருக்கக் கூடாது என்ற மனப்பான்மை நமக்கிருக்கவேண்டும்.

3. மிகுந்த சந்தோஷம்.

"இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" எனறு வானுலோகத்தார்கள் பாடினார்கள்.

இந்த வசனத்தை நாம் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து தியானம் பண்ணலாம்.

(a) "சந்தோஷம்." சஞ்சலம் நிறைந்த இவ்வுலகில் எளியவர்களை மனமகிழ்ச்சியுள்ளவர்களாக்குவது ஓர் சிறந்த கிறிஸ்தவ ஊழியம். சரியான சாப்பாடு அல்லது வேலையில்லாமல் இந்தக்காலத்தில் விசேஷமாய்க் கிராமங்களில் திண்டாடும் மக்களைக் கிறிஸ்தவர்கள் போய் நேரில் சந்தித்து உற்சாகப்படுத்துவது எவ்வளவோ ஆசீர்வாதமான செய்கை. இந்தக் குறிப்பை நாம் அதிகமாக நம் போதனையிலும் சாதனையிலும் விளக்கவேண்டும். பலவிதமான சிலாக்கியங்களை உடையவர்களாகிய நாம் சொந்த வசதியைமட்டும் பாராமல் அப்படிப்பட்டவர்களோடு கிறிஸ்மஸ் தினத்திலே போய்த்தங்கியிருந்து அவர்களைக் கடவுள் ஆராதனையில் சேர்த்துப் பாட்டுப்பாடி கிறிஸ்மஸ் சந்தோஷத்தை அவர்களும் அனுபவிக்கும்படி பங்கிட்டு வருவது அவர்கட்கும் நமக்கும் ஓர் பேராசீர்வாதத்தை உண்டாக்கும்.

(b) நற்செய்தி. இயேசுபாலனுடைய பிறப்பிலேயே உலகத்துக்குரிய நற்செய்தி உண்டானதென்பதை ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒவ்வொரு ஆண்டிலும் விசேஷமாய் இக்காலத்திலும் நினைவுகூறுதல் வேண்டும்.

சிருஷ்டிகராகிய கடவுள் பலவீனமுள்ள மனிதனை பாவத்திலும் துக்கத்திலுமிருந்து விடுவிக்கும்படியாக அவர்தாமே மனிதனாகி மனிதனுடைய துன்பங்களெல்லாவற்றையும் அனுபவித்து வந்தாரென்ற சத்தியத்தை நாம் நினைவுகூர்ந்து அதனால் உண்டாகும் ஆனந்தத்தை பிறருக்குப் பங்கிட்டு கொடுப்போமாக!

நவ வருடப் பிரசங்கக் குறிப்புகள்

(பத்திராதிபர்)

வேதபாடம். ஏசாயா 52.

வசனங்கள். ஏசாயா 52 : 1-12.

நோக்கம். புதுவருடத்தில் கர்த்தரின் பராமரிப்பை உணர்த்துதல்.

முகவுரை. புதுவருடம் பலகாரணங்களால் தொன்றுதொட்டு மதித்து எல்லாராலும் கொண்டாடப்பட்டு வருகிறது. கடந்த காலங்

களில் ஆச்சரியமான பிரகாரம் வழிநடத்தப்பட்டும், ஆபத்து இக்கட்டுகளுக்கு நீங்கலாக்கப்பட்டும், அற்புதமாய் உண்ண ஆகாரம், உடுக்க ஆடை, இருக்க இடம், பார்க்க ஊழியம், பழகச் சிநேகிதர் கொடுக்கப்பட்டும் வந்திருக்கிறோம்.

இம்மட்டும் காத்த இறைவன் இனிமேலும் வருகிற வருடத்தில் நம்மை நடத்த வேண்டுவோம். என்ன நடக்கும, எப்படியிருக்கும் என்பதறியாமலிருக்கும் பேதையராகிய நமக்கு கடவுள் காட்டும் வழி என்ன ?

அடிமைத்தன தேசத்திலிருந்து சுயாதீன நாட்டிற்குச் செல்லப் போகும் மக்களின் சரித்திர சம்பந்தத்தை விஸ்தரி.

I. பழைய நிலமையை விட்டுவிட ஏவுகிறார். (1, 2, 11) " எழும்பு ", " அசுத்தன் இனிவருவதில்லை ", " தூசியை உதறிவிட்டு எழுந்திரு ", " வீற்றிரு " " கட்டுகளை அவிழ்த்துவிடு " " அசுத்தமானதை தொடாதிருங்கள் ", " சுத்திகரியுங்கள், " என்ற வார்த்தைகள் பழைய நிலமையை நினைப்பூட்டுகின்றன. புதியதோர் இடத்திற்குப்போக பழைய நிலமை மாறவேண்டும். பழைய ஆண்டிலிருந்து புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கும் நாம் பழைய நாட்டையும அதோடு சம்பந்தப்பட்ட வழக்கபழக்கங்களையும், பாவங்களையும் விட்டுவிட்டு புதிய வருடத்திற்குள் பிரவேசிப்போம்.

அப்படியானால் புதிய ஆண்டில் அவர் காட்டும் வழி என்ன?

II. கடவுள் ராஜரீகம் பண்ணுவதாக தைரியமூட்டுகிறார். (வ. 7) அவர் அரசனாயிருக்கும்போது சமாதானம், நற்செய்தி, கெம்பீர சங்கீதம், இரட்சிப்பு ஆறுதல் நிலவும். கடவுள் நமதிதயங்களில் வீற்றிருந்து அரசு புரியும்போது மேற்கூறிய இலட்சணங்கள் காணப்பட யாரைக் கேட்கவேண்டும் ? இப்புதிய ஆண்டில் கடவுள் நமதிதயங்களில் வசிக்க ஆசிப்போமா ? நாம் அவரை நம்மிடம் தங்க வருந்தி அழைப்போம். (லூக்கா 24 : 29) நமதிதயங்களில் தங்க இடம் கொடுப்போம். (வெளி. 3 : 20).

III. முன்னே போவதாகவும் பின்னே காப்பதாகவும் வாக்களிக்கிறார். (வ. 12) இது நமக்கு தைரியத்தைக் கொடுக்கிறது. முன்னால் என்ன இருக்குமோ இந்த ஆண்டில் என்று பயப்படுகிறாயா ? கடவுள் உனக்கு முன்னே போவேன் என்கிறார். தகப்பன் முன் செல்லும்போது பிள்ளைக்கு பயமேது ? முதலாம் யுத்த சமயம் கடற் பிரயாணம் செய்த ஓர் மிஷனரியைப் பிறர் தடுத்த போது அவர் " உலகம் கடவுள் கரத்திலுள்ளது. நான் மரித்தால் கடவுள் கரத்தில்தானே இருப்பேன் " என்றார். வருகிற வருடத்தில் நாம் அவர் முன் செல்ல இடம் கொடுப்போம். அவர் வழிகாட்டுவார். கடவுள் வாக்குமாறாதவர்.

கடவுள் பிறகேயும் உங்களைக் காக்கிறவராயிருப்பார். கடவுள் வழி காட்டுகிறவராய் முன்னே மாத்திரமல்ல காக்கிறவராய் பிறகேயும் வருவார். யாதொரு அபாயம் நேரிடாதபடி காவலாயிருப்பார். புது வருடத்தில் என்ன நேரிடுமோ என்ற கலக்கமா? பயப்படாதே, கடவுள் உன் இருபுறத்திலும் இருப்பார்.

புதிய வருடத்திற்குள் பிரவேசிக்கும் நாம் கடவுள் நமக்குக் காட்டும் வழியில் நடந்து இவ்வருடத்தை ஜீவியத்திலும் ஊழியத்திலும் பிரயோஜனப்படுத்தக் கடவுள் அருள்புரிவாராக.

சிறுவர் பாகம்

இயேசு ஜயந்தி நாள்

சிறுவர்களுக்காக ஓர் ஆராதனை

(பசுமலை வேதப்பாடசாலை கனம் உவைட் அம்மாள் தயாரித்தது)

கிறிஸ்து ஜயந்தி மூலமாய் நாம் பக்தியில் வளர்ச்சி அடையலாம். அதைத்தவிர சுற்றிலும் இருக்கிற ஹிந்து குடும்பங்களுக்கு நமது ஆண்டவர் செய்த அதிசயமான தரிசனத்தைக் காண்பிப்பது உத்தமம்.

பின் எழுதியிருக்கிற சின்ன ஆராதனையை வீட்டிலே குடும்ப ஜெபமாக உபயோகிக்கலாம். பக்கத்து வீட்டுக்காரர்களை அழைத்து அவர்கள் அதைப் பார்க்கும்படி செய்து அவர்களைச் சந்தோஷிப்பிக்கிறது நலம். கிராமத்து பிள்ளைகள் இதைப் பள்ளிக்கூடத்தில் உபயோகிக்கலாம். சபைக்கு முன்பாக பிள்ளைகள் சின்ன ஆராதனை மாதரி செய்யக்கூடும். எல்லாப் பிள்ளைகளும் சந்தோஷமாய் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

மூன்றுவிதமாய் செய்யலாம்.

1. பிளானல் கிராவ் Flannelgraph பலகை இருந்தால் பிள்ளைகள் ஏற்ற படங்களை பலகையில் வைத்து பேசவேண்டிய வார்த்தையைச் சொல்லலாம்.

2. இரட்சணியபுரத்தில் விற்கிற (creche) தொட்டில் பொம்மைகள் இருந்தால் அவைகளை ஒழுங்காய் வைத்து பொம்மை பேசுகிறதுபோல பிள்ளைகள் பேசலாம்.

3. நாடகமாக பிள்ளைகள் இந்த ஆராதனையை நடத்தலாம்.

கதா பாத்திரங்கள்

1. வாசிக்கிறவர்
2. தேவதூதன்
3. மரியாள்
4. யோசேப்பு
5. சத்திரக்காரன்
6. மேய்ப்பர்கள்—2
7. சாஸ்திரிகள்—3
8. சின்ன பிள்ளைகள்

இத்தனை ஆட்கள் ஒரு குடும்பத்தில் இல்லாதபட்சத்தில் ஒரே பிள்ளை 2 அல்லது 3 ஆட்களைப்போல் பேசலாம். வெவ்வேறு ஆட்கள் பேசுகிறார்கள் என்று அடையாளமாக வாய் சத்தம் வித்தியாசமாய் இருக்கவேண்டும். இப்படி செய்வது பிள்ளைகளுக்கு அதிக பிரியம்.

I. முதல் காட்சி

நாசரேத்தென்னும் ஊரில் ஒரு சின்ன வீட்டுக்கு முன்பாக மரியாள் உட்காருகிறாள்.

வாசிக்கிறவர்: *நாசரேத்தூரில் வசித்திருந்த மரியாள் அதிக சந்தோஷமாயிருந்தாள். கடவுளால் அனுப்பப்பட்ட தேவதூதன் அவளுக்கு அருமையான செய்தி அறிவித்தான்.*

(தேவதூதன் வந்து நிற்கவும்)

தேவதூதன்: *மரியாளே! கடவுள் உனக்கு ஆண் குழந்தையைக் கொடுக்கப்போகிறார். அக்குழந்தைக்கு இயேசு என்கிற பேர் கொடுக்கவும்.*

(யோசேப்பு வந்து ஒருபக்கம் நிற்கவும்)

வாசிக்கிறவர்: *தேவதூதன் யோசேப்புக்கு அதே சங்கதியைச் சொல்லிவிட்டான்.*

தேவதூதன்: *யோசேப்பே! நீயும் மரியாளும் இயேசு பாப்பாவைச் சந்தோஷமாய்க் கவனித்து நன்றாய் வளர்க்கவேண்டும்.*

II. இரண்டாம் காட்சி

பெத்தலேகேமுக்கு போகுதல்

யோசேப்பும் மரியாளும் புறப்படுகிற மாதிரி காண்பிக்கவும்.

வாசிக்கிறவர்: *ஒருநாள் மரியாளும் யோசேப்பும் பெத்தலேகேமுக்குப் போகப் புறப்பட்டார்கள். எல்லாரும் சொந்த ஊருக்குப் போய் தம்முடைய கணக்கிலே பேரை எழுதவேண்டுமென்று ராஜா உத்திரவு கொடுத்துவிட்டார். ராஜாவின் உத்திரவின்படி செய்ய*

மற்ற எல்லா ஜனங்களோடும் மரியாளும் யோசேப்பும் புறப்பட்டார்கள். வழியோ அதிக கஷ்டமான பாதை. மலை ஏறி இறங்க வேண்டியதிருந்தது. மரியாள் நடக்க முடியாமல் இருந்தாள். கழுதையின்மேல் ஏறிப்போனாள். சூரியன் அஸ்தமிக்கும் சமயம் அவர்கள் ஊருக்கு வந்துசேர்ந்தார்கள். பிரயாணத்தினால் அதிக ஆயாசமாயிருந்தார்கள். கொஞ்சம் நேரம் உட்கார்ந்து நட்சத்திரங்களைக் கவனித்து இராத்தங்க இடம் கிடைக்குமோ என்று பேசினார்கள். நாள் முழுவதும் ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் ஊருக்கு வந்து கொண்டேயிருந்தார்கள். மரியாளுக்கும் யோசேப்புக்கும் சத்திரத்தில் இடம் கிடைக்கவேயில்லை.

(சத்திரக்காரன் வந்து நிற்கவும்)

சத்திரக்காரன் :—என்ன செய்யலாம். இங்கு இடம் ஒன்றுமே இல்லை.

வாசிக்கிறவர் :—அதினால் படுக்கிறதற்கு மாட்டுக் கொட்டத்துக்குப் போனார்கள். அன்றைக்கு இராத்திரி ஆடுமாடுகள் கிட்டப் படுக்கவும் நட்சத்திரங்கள் ஒளிவீசவும் கடவுள் இயேசு என்கிற ஆண் குழந்தையை மரியாளுக்கு அனுப்பிவிட்டார். மரியாள் கடவுளுக்கு நன்றி செலுத்தும்படி ஸ்தோத்திரப்பாட்டு ஒன்று சந்தோஷத்தோடு பாடினாள்.

மரியாள் :—(லூக்கா 1 : 46-49 வாசிக்கவும்)

III. மேய்ப்பர்கள்.

(பொம்மையை உபயோகித்தால் வயலில் இருக்கிறதுபோல ஒழுங்காய் வைக்கவும் அல்லது பிள்ளைகள் நிற்கவும்)

ஒரு மேய்ப்பன் 23ம் சங்கீதம் சொல்லவேண்டும்.

1ம் மேய்ப்பன் :—மேய்ப்பர்களே! நண்பர்களே! அதோ வீசுகிற ஒளியைக் கவனித்துப் பாருங்கள்! முதல் முதல் வெளிச்சம் கொஞ்சமாய்த்தான் இருந்தது. இப்போதோ அதிகமதிகமாய் மின்னுகிறதே! இதென்ன ஆச்சரியம்!

2ம் மேய்ப்பன் :—எனக்கு பயமாயிருக்கிறதே!

தேவதூதன் :—(வந்து நிற்கவும்) பயப்படாதிருங்கள்! இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்காகத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள்.

மேய்ப்பர்கள் :—பெத்லேகேம் ஊருக்குப் போய் பார்ப்போம் வாருங்கள்.

எல்லாரும் :—புகழ்மாலையில் 35ம் பாட்டு பாடலாம்.

" பெத்தலையில் பிறந்தவரைப் போற்றி துதி, மனமே "

(மேய்ப்பர்கள் வெளியே போகவும்)

IVம் காட்சி....சாஸ்திரிகள்

(3 சாஸ்திரிகள் நின்று பேசிக்கொண்டிருக்கவேண்டும்)

வாசிக்கிறவர் :—அநேக வருஷங்களுக்குமுந்தி, பெத்தலேகேம் ஊரிலிருந்து வெகுதூரமான இடத்திலே வானத்தைக் கவனித்து நட்சத்திரங்களைப்பற்றி படித்துக்கொண்டிருந்தவர்கள் வசித்தார்கள். அவர்கள் சாஸ்திரிகள் என்னப்படுவார்கள். ஒருநாள் இராத்திரி கிழக்கிலே பெரிய நட்சத்திரம் ஒன்றைக் கவனித்தார்கள்.

1ம் சாஸ்திரி :—அந்தோ ! அது ஒரு புது ஒளி இல்லையா !

2ம் சாஸ்திரி :—மற்ற எல்லா ஒளியைப்பார்க்கிலும் அதிகப் பிரகாசமாயிருக்கிறதல்லவா !

3ம் சாஸ்திரி :—உலக ராஜா பிறந்திருப்பாரே ! இதுதான் அடையாளம். போய் அவரை தரிசிப்போம் வாருங்கள்.

வாசிக்கிறவர் : சாஸ்திரிகள் தங்கள் ஒட்டகங்களின் மேல் ஏறி வனாந்தரத்தைக் கடந்து உலக ராஜா பிறந்த இடத்துக்குப்போக வழி தேடினார்கள். புது ராஜாவுக்குக் கொடுக்க வெகுமதியாக பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் கொண்டுவந்தார்கள். நட்சத்திரம் இயேசு பாப்பா இருந்த இடத்துக்கு மேல் வந்து நின்றது. சாஸ்திரிகள் இயேசு பாப்பாவின் கிட்டவந்து அவருடைய பாதத்தைக் கும்பிட்டு அவருக்குக் காணிக்கையைக் கொடுத்தார்கள்.

(சாஸ்திரிகள் வந்து கும்பிடும்மாதிரி காண்பிக்கவும்)

V. உலகத்திலிருக்கிற எல்லா தேசத்துப் பிள்ளைகளும் வருகிற காட்சி.

(பொம்மை அல்லது படங்கள் அல்லது பிள்ளைகள் பல தேசத்துப் பிள்ளைகளைப்போல் உடுத்தி முன்னணையின் கிட்டவரவும். பிள்ளைகள் முன்னமே யோசித்துத் தங்களுக்குப் பிரியமுள்ள ஏதாவது பொருளைக் காணிக்கையாக கொண்டுவந்து வைக்கலாம். பிற்பாடு அப்பொருட்களை திக்கற்றவர்களுக்காவது வியாதியுள்ளவர்களுக்காவது கொடுக்கலாம்)

வாசிக்கிறவர்: இயேசு ராஜா சின்ன பாப்பாவாக பிறந்தார் என்பது இன்றுள்வரை பிள்ளைகளுக்கும் பெரியோர்களுக்கும் சொல்லப்படுகிறது. அநேகம் பேர் இயேசுவைப் பின்பற்றி வருகிறார்கள். மற்றவர்களுக்கு அவரைப்பற்றி பிரசங்கம்பண்ணுவார்கள். வரங்களைக் கொடுப்பார்கள்.

1. பர்மாப்பிள்ளை :—(பழங்களைக் கொண்டுவந்து வைக்கவும்)

என் தேசத்திலிருந்து அருமையான பழங்களைக் காணிக்கையாக வைக்கிறேன்.

2. இலங்கைப்பிள்ளை :—நான் வசிக்கிற தீவில் தேங்காய் நன்றாய் விளைகிறது அதைக் காணிக்கையாக வைக்கிறேன்.

3. சீனப்பிள்ளை :—என் தேசத்தில் விளைந்திருக்கிற அரிசியைக் கொடுக்கிறேன்.

4. மேல்நாட்டுப்பிள்ளை :—எனக்கு அதிகப் பிரியமுள்ள விளையாட்டு சாமானை வைக்கிறேன்.

5. ஆப்பிரிக்காப்பிள்ளை :—நான் சந்தோஷமாய் சாப்பிடுகிற மக்காச்சோளத்தைக் கொடுக்கிறேன்.

6. இந்தியாப்பிள்ளை :—நான் அதிகமாய் விரும்புகிற வளையலைச் சந்தோஷமாய்த் தருகிறேன்.

(பிள்ளைகள் பின்வரும் வசனத்தைப் பாட்டாக பாடலாம் அல்லது வாசிக்கலாம்)

ஏது நான் ஈவேன்
  ஏழையல்லோ நான் ?
யான் ஓர் மேய்ப்பனானால்,
  குட்டி ஒன்றீவேன்.
நான் ஓர் ஞானியானால்,
  என் பாகம் செய்வேன்
யாதிலும் ஈவேன்
  இதயம்

வாசிக்கிறவர் :—இயேசு சின்னக் குழந்தையாகப் பிறந்தார். 2000 வருஷங்கள் ஆகிவிட்டாலும் சாஸ்திரிகள் காணிக்கையைக் கொண்டுவந்தமாதிரி இன்றைக்கும் கிறிஸ்து ஜயந்தி நாளிலே நாம் எல்லாரும் காணிக்கையைக் கொடுக்கிறோம். நாம் நமது இரட்சகரை அதிகமாய் நேசிக்கிறோம் என்கிற அடையாளமாக உலகத்திலிருக்கிற மக்கள் எல்லாரையும் நேசித்து அவர்களுக்கு உதவி செய்து வருகிறோம்.

பாட்டு

எல்லாரும் "பக்தரே வாரும்" என்கிற கீதம் பாடி ஆராதனையை முடிக்கவும்.

கிறிஸ்து ஜயந்தி கதை

(தனமணி காபிரியேல் அம்மாள், மதுரை)

பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள் ; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான்.
(லூக்கா 2 : 12)

"ஜேன்! ஜேன்!! இதோ வந்து பார், அப்பா நமக்கு ஒரு கிறிஸ்மஸ் மரம் கொண்டுவந்திருக்கிறார், அம்மா! வாங்க, கிறிஸ்மஸ் மரத்தை எங்கே நடலாம் என்று சொல்லுங்கள்" என்று தாமஸ் சந்தோஷத்தோடே கூப்பிட்டுக் கொண்டு ஓடிவந்தான். அவன் தாயாரும், அவன் தங்கை ஜேனும் வெளியே வந்து, சந்தோஷப்பட்டு, எல்லோருமாகச் சேர்ந்து அதைத் தூக்கிக் கொண்டுபோய் ஒரு அறையில் நாட்டி ஜோடிக்கத் தொடங்கினார்கள். அழகான படங்கள் பற்பல வடிவமுள்ள பலூன்கள் சின்ன பொம்மைகள் வர்ணத் தாளில் செய்த சங்கிலிகள் மரத்தில் மாட்டப்பட்டன. கிறிஸ்மஸ் தினத்தில் ஏழைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்போகிற சீப்பு, சோப்பு, பொம்மைகள், சட்டைத்துணிகள், படங்கள் முதலிய பற்பல சாமான்களையும அவரவர்களுடைய பெயர்களை எழுதிக் கட்டித் தொங்க வைத்தார்கள். அழகிய ஜரிகை மாலைகளால் கிறிஸ்மஸ் மரத்தை அழகுபடுத்தினார்கள். மெழுகுவர்த்திகளைக் கட்டி இரவானதும் அவைகளைக் கொளுத்தினார்கள். கிறிஸ்மஸ்மரம் இப்போது மிகவும் அழகாய் ஜொலித்தது.

இரவில் குளிர் இருந்தபடியால் அடுப்பில் விறகுகளைப்போட்டுத் தாயார் கணப்பு உண்டாக்கினார்கள் மேஜைமேல் ருசிகரமான பற்பல பதார்த்தங்கள் நிரம்பி இருந்தன. சாப்பிடுமுன் அப்பா ஜெபம் செய்தார். முடிந்ததும் சாப்பிட உட்கார்ந்தார்கள். யாரோ கதவைத் தட்டுகிற சத்தம் கேட்டது. தாமஸும், ஜேனும் கதவைத்திறந்து பார்த்தார்கள். குளிர் வெளியே அதிகமாயிருந்தது. அங்கே ஒரு சின்னப்பையன் குளிரால் நடுங்கிக்கொண்டு, இவர்களைப் பார்த்து, "எனக்குக் குளிர் அதிகமாயிருக்கிறது, என் கைகளும் கால்களும் விரைத்துப்போயின. பசியோ தாங்க முடியவில்லை. உங்கள் வீட்டில் கொஞ்சம இடம் தரமாட்டீர்களா?" என்று கெஞ்சிக் கேட்டான். ஜேனும், தாமஸும் அந்த ஏழைப் பையனின்மேல் பரிதாபங் கொண்டு உள்ளே கூட்டிக்கொண்டு வந்தார்கள். பெற்றோரும் அந்தப் புதிய விருந்தாளியைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டு நெருப்பு அடுப்பண்டை உட்காரவைத்துக் குளிரைப் போக்கி சாப்பாடு கொடுத்து கிறிஸ்மஸ் மரத்தண்டை உட்கார்ந்து அநேகம் பாடல்களையெல்லாம் பாடி, பின்பு அவரவர் படுக்கைக்குப் போனார்கள். அந்தச் சின்னப்பையனை அடுப்பண்டை படுக்கவைத்து போர்வையால் மூடினார்கள். அந்தப் பையன் குளிர் நீங்கித் தூங்கினான்.

இரவில் அதிக நேரத்திற்குப் பின் ஜேன் விழித்துக்கொண்டாள். அவளுக்கு ஒரு இனிமையான பாட்டுச் சத்தம் கேட்டது. வானத்தில் தேவதூதர்கள் இயேசு பாலனுக்குப் பாடுகிறார்களோ? என எண்ணினாள். மெதுவாக நகர்ந்து போய் " தாமஸ்! தாமஸ்! எழுந்திரு, இதோ பார், எங்கிருந்தோ ஒரு நேர்த்தியான பாட்டுச் சத்தம் கேட்கிறதே—கவனித்துக்கேள் " என்று மெதுவாகச் சொன்னாள். தாமஸ் எழுந்து, பார்த்தான். பாட்டின் சத்தம் எங்கிருந்து வருகிறது என்று கவனித்தான். ஜேனின் கையைப் பிடித்து மெதுவாக நடந்து ஜன்னல் பக்கம் எட்டிப்பார்த்தான்—அதோ ! வரிசை வரிசையாகத் தேவதூதர்கள் இவர்கள் வீட்டைப் பார்த்தவண்ணமாக நின்று கைகளில் தம்புரு, கின்னரம், எக்காளம் முதலிய வாத்தியக் கருவிகளை வைத்து பாடிக்கொண்டிருக்கும் காட்சியை இருவரும் கண்டார்கள். ஆச்சரியத்தோடே நின்றுகொண்டிருக்க, வீட்டில் யாரோ வருகிற காலடிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தபோது, இரவில் குளிரால் நடுங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்த அந்தச் சின்னப்பையன் வெண் வஸ்திரம் அணிந்து, தலையில் தங்கக் கிரீடம் தரித்து அதிகப் பிரகாசத்துடன் வருவதைக் கண்டார்கள். இவர்கள் சமீபமாய், அந்தப் பையன் வந்து அன்புடன் இவர்களைப் பார்த்து, " நேற்று இரவு வெளியே பனியால் நனைந்து கஷ்டப்பட்ட எனக்கு தங்க இடமும், சாப்பாடும் தந்து உதவி செய்தீர்கள். நான் ஒரு அனாதைப் பையன் என்று எண்ணி அப்படிச் செய்தீர்கள். நான்தான் இயேசு பாலகன் " மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால் இப்போது என்னுடைய ஆசீர்வாதத்தை உங்களுக்குத் தருவேன்" என்று சொல்லி, அந்தக் கிறிஸ்மஸ் மரத்தில் ஒரு கிளையை ஒடித்து வெளியே கொண்டுபோய் அவர்கள் வீட்டோரத்தில் நட்டு " இந்தக் கிளை முளைத்து, பெரிய மரமாகி ஒவ்வொரு வருஷமும் உங்களுக்கு வேண்டிய இனிமையான பழங்களைத்தரும் " என்றான். இவ்விதமாக ஆசீர்வதித்த பின் இயேசு பாலகனும் தேவதூதர்களும் மறைந்தனர். அதிகாலையும் வந்தது.

ஜேனும் தாமஸும் தாங்கள் கண்ட அந்த அற்புதக் காட்சியைப் பற்றி அப்பா, அம்மாவிடம் விபரமாய்ச் சொன்னார்கள்.

நவ வருடம்—கதை

(கனம் ஏ. தானியேல், வேதப்பாடசாலை மாணவர், பசுமலை)

இளவேனிற் காலத்தில், ஒரு நாள் மாலைவேளையில் நான் ஒரு மலையடிவாரமாய் போய்க் கொண்டிருந்தேன், அங்கு தன்னந் தனியே, கண்ணீர் சொரிந்து நின்ற ஒரு சிறுவனைப் பார்த்தேன்.

அவன் முகத்தில் துக்கமே குடிகொண்டிருந்தது நான் அவன் சமீபத்தில் போய் "சிறுவனே! நீ துக்கத்தோடு தன்னந்தனியே தடுமாறி நிற்பதேன்" என்று அன்போடு கேட்டேன். அப்பொழுது சிறுவன் என்னைப் பார்த்து "அம்மா! நான் ஒரு பெரிய பிரபுவின் மகன்; இன்று காலையில் நான் வீட்டில் உட்கார்ந்திருக்கும்போது என்னை அன்போடு நேசிக்கும் தந்தை என்னைப் பார்த்து மகனே! அதோ தூரத்திலே நான் ஒரு பெரிய மாளிகையை உனக்காகக் கட்டிவைத்திருக்கிறேன். நீ சில நிமிட நேரம் இங்கே காத்திரு, நான் வீட்டிலுள்ள சாமான்களை ஒழுங்குபடுத்துகிறேன். பின்பு நாம் ஒன்றாகச் சேர்ந்து புதிய மாளிகைக்குக் குடிபோய் சந்தோஷமாயிருக்கலாம் என்று சொல்லி காரியங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தார். அப்பொழுது நான் நினைத்தது என்னவென்றால் எனக்காக கட்டின வீடு எனக்குச் சொந்தம் தானே, அப்படியிருக்க ஏன் என் தகப்பனார் வரும்வரையிலும் காத்திருக்கவேண்டும்? இரகசியமாய் புதிய வீட்டைப் போய் பார்ப்போம் என்று நினைத்து எனது தகப்பனாரைக் காணாமல் தூரத்திலிருக்கும் புதிய வீட்டிற்கு நேராய் ஓடினேன். ஆனால் வீட்டிற்குச்செல்லும் வழியைத் தவறவிட்டேன், கால் கற்களில் பட்டு நோவெடுக்கிறது, பசியினால் நடக்க முடியவில்லை, நேரமும் சாயங்காலமாயிற்று, எனக்கு உதவி செய்யவும் யாருமில்லை, இப்படிப்பட்ட நிலைமையில் தடுமாறுகிறேன் அம்மா! என்று அழுகையோடு சொன்னான். பையன் திரும்பவும் என்னைப் பார்த்து "அம்மா! என்னை என் அப்பாவிடம் அழைத்துச்செல்ல மாட்டீர்களா? என்று கெஞ்சினான்.

நான் சிறுவனைப் பார்த்து "சிறுவனே! நீ செய்தது தவறு; தானாய் ஒன்றுஞ் செய்யக்கூடாத நீ உன் தகப்பனாரை விட்டுவிட்டு தனியே நடந்ததால் தான் வழியறியாமலும், கஷ்டங்களாலும் தவிக்கிறாய்; உன் தகப்பனாரை எனக்குத் தெரியும், அவர் இப்போது உன்னைத் தேடியலையும் சமயம்; நான் உன்னை அவரண்டை கொண்டுபோய் சேர்க்கிறேன்" என்று அன்போடு சொன்னேன். இப்படி பேசிக்கொண்டிருக்கும்போதே பையனைத் தேடியலைந்த தகப்பனார் அங்கு வந்தார். அவர் அவனைப் பார்த்து "மகனே ஏன் இப்படி செய்தாய்" என்று சொல்லி அவனைத் தன் கரங்களில் தூக்கியெடுத்தார், எனக்கும் நன்றி கூறினார்.

கொஞ்சத் தூரத்தில் ஒரு பெரிய மாளிகை தென்பட்டது. சிறுவனைத் தகப்பனார் அப்பெரிய மாளிகைக்கு கொண்டுபோனார். நான் உள்ளே சுற்றிப்பார்த்தபோது 365 அறைகள் நேர்த்தியாய் அமைக்கப்பட்டிருந்தன. தகப்பனார் கூடயிருந்ததால் சிறுவன் களைப்பு நீங்கி சந்தோஷத்தோடு மாளிகையில் விளையாடினான்.

அன்பரே, பழைய வீடாகிய ஒரு வருஷத்தைக் கடந்து புதிய மாளிகையாகிய ஒரு வருஷத்தின் ஓரத்தில் வந்து நிற்கிறோம். 365 நாட்களாகிய அறைகள் கொண்ட இவ்வருடம் சந்தோஷத்தையளிக்குமோ, துக்கத்தையும் கண்ணீரையும் அளிக்குமோ அறியோம். ஆகையால் இப்புது வருடத்துக்குள் நாம் தன்னந்தனிமையாய் பிரவேசியாமல் இவ்வருஷத்தை நமக்காய் தந்த நேசரோடு சேர்ந்து உள்ளே பிரவேசிப்போம். அவர் அதை நன்மையாலும், கிருபையாலும் முடிசூட்டுவார்.

கி. மு. சங்கப் பொருட்கள்—ஜனுவரி 1954.

குறிப்பு:— இங்கு குறிக்கப்பட்ட கி.மு. சங்கப் பொருட்கள் ஜனுவரி 1953க்கு உரியவை. ஆனால் புதுப் பொருட்கள் வெளியிடப்படக் கால தாமதமாகுமாதலாலும், இக்காரணம் பற்றியே இம்மாதப் பொருட்களை முன்னமே குறிப்பிடாததாலும், புதிய பொருட்கள் வெளியிடப்படும் வரை இப்பொருட்களை உபயோகப்படுத்த வேண்டுகிறோம் (ப—ர்.)

ஜனுவரி.	1	நல்ல ஆயத்தம்	II தீமோத். 2 : 1-7
	2	நல்ல சம்பாஷணை	I பேதுரு 1 : 15
	3	நல்ல நம்பிக்கை	I பேதுரு 3 : 10-16
	4	நல்ல நோக்கம்	பிலிப்பியர் 1 : 21

கிறிஸ்துவுக்காகவும் திருச்சபைக்காகவும்

5	இயேசுக் கிறிஸ்துவுக்காக ஜீவியம் செய்	பிலிப்பியர் 1 : 21-26
6	இயேசுக் கிறிஸ்துவுக்காக ஊழியஞ் செய்	I கொரி. 15-58
7	இயேசுக் கிறிஸ்துவுக்கு உன் உயிரையே தியாகம் செய்	அப். 12 : 1-5
8	திருச்சபைக்கு அன்புகாட்டு	சங். 137 : 1-6
9	திருச்சபைக்கு சேவை செய்	ரோமர் 14 : 13-23
10	திருச்சபையைக் கட்டு	எபேசி. 2 : 13-22
11	கிறிஸ்துவுக்காகவும் திருச்சபைக்காகவும்	அப். 20 : 17-24

ஜீவியத்தை சிறக்கச் செய்வதேது ?

12 பவுல் அப்போஸ்தலனின் விடை பிலிப்பியர் 1 : 21
13 இயேசுவின் ஜெயத்தொனி யோவான் 17 : 1-5
14 சாமுவேல்—உபயோகமான வாழ்க்கை
I சாமு 12 : 1-5
15 பெருந்தகைமையான வாழ்க்கை அப். 20 : 17-38
16 இயேசுவின் ஆலோசனை யோவான் 9 : 1-7
17 தன்னயமற்ற ஜீவியம் யாத் 32 : 7-14
18 ஜீவியத்தை வெற்றி சிறக்கச் செய்வதேது ?
II கொரி. 3 : 6
I யோ. 5 : 12, கொலோ. 3 : 2

நான் இயேசுக்கிறிஸ்துவை பிறருக்கு பகிர்ந்துகொடுக்கிறேனா ?

19 இயேசுக்கிறிஸ்துவைப் பற்றிய அறிவை பகிர்ந்து கொடுக்கிறேனா ? எபேசி. 3 : 1-7

20 இயேசுக்கிறிஸ்துவைப்பற்றிய சத்தியத்தை பகிர்ந்து கொடுத்தல் அப். 10 : 34-48

21 இயேசுக்கிறிஸ்துவின் ஆவியை பகிர்ந்து கொடு.
I யோவா 3 : 14-18

22 இயேசுக்கிறிஸ்துவின் சிந்தையைப் பகிர்ந்து கொடு
பிலிப். 2 : 1-8

23 கடவுளைப்பற்றிய அறிவை பகிர்ந்து கொடு
யோவான் 14 : 1-12

24 கிறிஸ்தவ ஐக்கியத்தைப் பகிர்ந்து கொடு
I யோவான் 1 : 1-10

25 நான் கிறிஸ்துவை பிறரோடு பகிர்ந்து கொள்ளுகிறேனா ? யோவான் 1 : 40-42
அப். 8 : 34—35

பொறுமையும் ஞானமும்

26 நீதிமொழிகளின் பிரயோஜனம் நீதி 1 : 1-10
27 சோதனையை வெல்லு நீதி 1 : 11-23
28 ஞானத்தைத் தள்ளுவதால் ஏற்படும் பலன்
நீதி 1 : 24-33

29 ஞானமும், தெய்வ பக்தியும் தீத்து 2 : 10-22

30 துன்மார்க்கரை விட்டு விலகி பத்திரமாய் இரு தீத்து 2 : 10-22

31 கீழ்ப்படிதல், விசுவாசம், தேவபக்தி தீத்து 3 : 1-10

இயேசுவின் ஜெபப்பள்ளி.

இரண்டாம் பாடம்.

'ஆவியோடும் உண்மையோடும் அல்லது உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள்.

'உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது ; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்'. (யோவான் 4 : 23-24).

சமாரியப் பெண்ணுக்கு இயேசுநாதர் உரைத்த இவ்வார்த்தைகளே, ஜெபத்தைப்பற்றிய அவரது முதற் போதனையாகும். ஜெப உலகைப் பற்றிய சில அதிசயமான முதல் அம்சங்களை நமக்கு அவை தருகின்றன. பரமதந்தை தொழுதுகொள்ளுகிறவர்களைத் தேடுகிறார்: நமது வழிபாடு அவரது அன்பான இருதயத்தைத் திருப்தி செய்கிறது. அது அவருக்கு ஆனந்தம். அவர் உண்மையாகத் தொழுது கொள்ளுகிறவர்களையே தேடுகிறார். ஆனால் அவர் விரும்புகிறபடி பலர் இல்லாதிருப்பதையும் காண்கிறார். ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்வதே மெய்யான வழிபாடு. இத்தகைய வழிபாட்டிற்கு வழியைத் திறக்கவே குமாரன் வந்திருக்கின்றார். அதனையே நமக்குப் போதிக்கின்றார். ஆகையால் ஜெபப் பள்ளியில் உள்ள பாடங்களுள் ஒன்று ஆவியோடும் உண்மையோடும் ஜெபிப்பதாவது யாது ? என்பதை விளங்கிக்கொள்வதும், அதை எப்படி அடைய நம்மால் முடியும் ? என்பதை அறிவதுமே ஆகும்.

சமாரியப் பெண்ணுக்கு நமது ஆண்டவர் மூவித வழிபாட்டைப்பற்றிப் பேசினார். அவையாவன : (1) சமாரியரின் அறியாத்தனமான வழிபாடு. 'நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்!' (2) யூதரின் அறிவுள்ள வழிபாடு. இது கடவுளைப்பற்றிய மெய்யான அறிவு அடங்கியது. 'நாங்கள் அறிந்திருக்கிறதைத்

தொழுதுகொள்ளுகிறோம்., ஏனென்றால் இரட்சிப்பு யூதர்களின் வழியாய் வருகிறது.' (3) அவர் ஸ்தாபிக்கும்படி வந்த, புதிய, ஆத்மீக வழிபாடு. 'உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும உண்மையோடும் தொழுதுகொள்ளுங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது.' இச்சந்தர்ப்பத்தில், 'ஆவியோடும் உண்மையோடும்' என்ற பதங்களுக்கு நாம் அடிக்கடி நினைக்கிறபடி, மனப்பூர்வமான, மாய்மாலமற்ற உண்மை என்ற பொருளில்லை. கடவுளைப்பற்றி சிறிது அறிவும், பஞ்சாகமங்களுமே சமாரியருக்கிருந்தன; உண்மையாகவே ஜெபத்தின்மூலம கடவுளைத் தேடியவர்கள் அவர்களுள் சிலர் இருந்தனர் என்பதற்கு ஐயமில்லை. யூதருக்கு கடவுளைப்பற்றிய மெய்யான முழு வெளிப்படுத்துதலும் அவரது சத்திய வேதத்தில் அடங்கியிருந்தது. கடவுளை முழுமனதோடும் தேடிய பக்தர்களும் யூதரிலிருந்தனர். ஆயினும் 'ஆவியோடும் உண்மையோடும்' என்ற சொற்களின் முழுப் பொருளோடும் கடவுளை நாடிய பக்தர்கள் யூதரிலிருக்கவில்லை. இயேசுநாதர், 'காலம் வந்துகொண்டிருக்கிறது. அது இப்பொழுது வந்துமாயிற்று' என்று கூறுகிறார். அவரிலும், அவர் மூலமாகவும் மாத்திரமே, ஆவியோடும் உண்மையோடும் கடவுளைத் தொழுதுகொள்வது சாத்தியமாகும்.

கிறிஸ்தவர்களுக்குள்ளும் மூவிதமான தொழுகைக்காரர்கள் உண்டு. (1) சிலர் தங்கள் அறியாமையில் தாங்கள் கேட்பது இன்னதென்றே அறியாதிருக்கின்றனர்: அவர்கள் உண்மையாகவே ஜெபிக்கின்றனர். ஆயினும் அவர்கள் அடைவது அற்பம். (2) மற்றும் சிலர் திட்டவட்டமான அறிவு படைத்துளர். முழு மனதோடும், முழு இருதயத்தோடும் ஜெபிக்க முயல்கின்றனர். அடிக்கடி அதிக ஊக்கமாகவும் ஜெபிக்கின்றனர். ஆவியோடும் உண்மையோடு தொழுவதன் முழு ஆசியையும் அடைவதில்லை. (3) ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுகிற மூன்றுவது வழிபாட்டுக்காரர்களோடு நம்மையும் சேர்த்துக்கொள்ளுமாறு நாம் நமதாண்டவரிடம் வேண்டுதல் செய்யவேண்டும. ஆவியோடும் உண்மையோடும் தொழுவது எப்படி என்பதை அவரிடமே நாம் கற்கவேண்டும். இதுவே ஆத்மீக ஆராதனை. இதுவே பரமபிதா தேடுகிற மெய் வணக்கத்தாராக நம்மை ஆக்குகிறது. சரியாய் விளங்கிக்கொள்வதிலும், ஆவியோடும் உண்மையோடும தொழுதுகொள்ளுவதை அப்பியாசிப்பதிலுமே ஜெபத்தின் சகல தன்மையும் அடங்கும்.

கடவுள் 'ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்' இங்கே நமதாண்டவரால் எழுப்பப்பட்ட முதற்கருத்து யாதெனில், கடவுளுக்கும் அவரை வழிபடுகிறவர்களுக்கும் நெருங்கிய இசைவு இருக்கவேண்டும் என்பதே. கடவுள் எப்படியிருக்

கின்றாரோ அப்படியே அவரது வழிபாடும் அமைதல் வேண்டும். இது சர்வலோகத்திலுமுள்ள ஒரு கொள்கைக்குட்பட்டது. நமது ஐம்பொறிகளுக்கும் பொருள்களுக்கும் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்புகிறோம். ஒளியைப் பெறுவதற்கான உள்தகுதி கண்ணுக்குண்டு. அவ்வாறே ஒலியைப் பெறுவதற்கான உள்தகுதி செவிக்குண்டு. இவ்வாறே கடவுளை உண்மையோடு வழிபடவும், கடவுளைக் காணவும், கடவுளை அறியவும், கடவுளைச் சொந்தமாக்கிக் கொள்ளவும், கடவுளோடு இன்புறவும் நாடு மனிதன் கடவுளோடு இசைந்திருக்கவேண்டும். கடவுள் ஆவியாயிருப்பதால் கடவுளை நாம் ஆவியோடு வழிபடவேண்டும். கடவுள் எப்படியிருக்கின்றாரோ அப்படியே அவரை வழிபடுபவர்களுமிருப்பர்.

இதன் கருத்து என்ன? உண்மையான வழிபாட்டு ஸ்தலம் சமாரியாவா? எருசலேமா? என்று சமாரிய ஸ்திரீ நமதாண்டவரைக் கேட்டாள். இதுமுதல் கடவுளை வழிபடும் ஸ்தலம் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு இடத்தில் இராது என்று ஆண்டவர் விடை பகர்ந்தார். 'ஸ்திரீயே! நான் சொல்லுகிறதை நம்பு; நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலுமாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வருகிறது' என்றார். கடவுள் ஆவியாயிருக்கிறபடியால் இடத்தாலும் (space) காலத்தாலும (time) கட்டுப்படுத்தக்கூடியவரன்று. அவரது எல்லையற்ற பரிபூரணத்தால் எப்பொழுதும் எங்கும் அப்படியே இருப்பார். ஆகையால் இடத்தாலோ அல்லது உருவத்தாலோ இதுமுதல் கடவுள் கட்டுப்படுத்தப்படார். ஆனால் ஆவியாயுள்ள கடவுள் ஆவியாலேயே கட்டுப்படுத்தப்படுவார். இது ஒரு ஆழ்ந்த முக்கிய சத்தியம். சில இடங்களுக்கும் காலங்களுக்கும் கட்டுப்படுத்தப்பட்ட நமது கிறிஸ்துமார்க்கம் இச்சத்தியத்திற்கு எவ்வளவு தூரமாயிருக்கிறது பாருங்கள். தேவாலயத்திலோ, தனது அறையிலோ உண்மையோடு ஜெபிக்க நாடுகிற ஒரு மனிதன், வாரத்தின் அல்லது நாளின் பெரும் பகுதியை, அவன் ஜெபித்த ஆவிக்கு முற்றும் வேறுபாடான ஆவியோடு செலவிடுகிறான். அவனது வழிபாடு, ஒரு குறிப்பிட்ட இடத்தின் அல்லது மணியின் விளைவேயல்லாது அவனது முழுத்தன்மையின் விளைவன்று. கடவுள் ஆவி. அவர் நித்தியர். மாறாதவர். அவர் எப்படியிருக்கிறாரோ அப்படியே எப்பொழுதும் உண்மையாக இருக்கிறார். அவ்வாறே நமது வழிபாடும் ஆவியோடும் உண்மையோடும் இருக்க வேண்டும். அவரது வழிபாடு நமது வாழ்க்கையின் ஆவியாயிருக்க வேண்டும். கடவுள் ஆவியாயிருப்பதுபோலவே நமது வாழ்க்கையும் ஆவியோடு தொழுவதாயிருக்கவேண்டும்.

'கடவுள் ஆவியாயிருக்கிறார்: அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்.' இதில் காணப்படும் இரண்டாவது தியானம் யாதெ

னில், ஆவியோடு தொழுதுகொள்வது கடவுளிடத்திலிருந்து வர வேண்டும் என்பதே. கடவுள் ஆவி. ஆவியை அருள்வது அவருக்கே உரியது. அத்தகைய ஆவியோடு கூடிய வழிபாட்டிற்கு நமக்குப் பரிசுத்த ஆவியைத் தருவதன் மூலமாக நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கவே கடவுள் தமது திருச்சுதனை நமக்குத் தந்தருளினார். தமது திருப்பணியைப் பற்றியே நமதாண்டவர் 'காலம் வருகிறது' 'அது இப்பொழுது வந்திருக்கிறது' என இரு முறை கூறினார். பரிசுத்தாவியினால் ஞான முழுக்கருளவே அவர் வந்தார். தாம் மகிமையடையும வரை தேற்றரவாளராகிய பரிசுத்தாவி வரார் என்று சொன்னார். (யோவான் 1 : 33, 7 : 37, 38, 16 : 7). பாவத்திற்கு அவர் முற்றுப் புள்ளி வைத்து கடவுளுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்ட பிறகே, நமது சார்பாக பரிசுத்தாவியைப் பெற்று பரமபிதாவின் ஆவியாக அவரை நமக்கனுப்பினார். (அப். 2: 33). கிறிஸ்து நம்மை மீட்டுக்கொண்ட பிறகே, அவருக்குள் நாம் பிள்ளைகள் என்ற உரிமையைப் பெற்றோம். 'அப்பா பிதாவே' என்று அபயமிடுவதற்காக அவரது திருக் குமாரனின் ஆவியை நமது இருதயங்களுக்குள் அனுப்பினார். குமாரத்துவத்தின் ஆவியான கிறிஸ்துவின் ஆவியோடு பரம தந்தையை வழிபடுவதே ஆவியோடு தொழுவதாகும்.

இதன் காரணமாகவே பரமபிதாவின் நாமத்தை இங்கு இயேசு உபயோகிக்கிறார். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் யாரும் தம்மைத் தனையன் என்றோ கடவுளைப் பரமபிதாவென்றோ அழைக்கவில்லை. குமாரனின் ஆவியைப் பெறறவர்களுக்கு மட்டுமே பரமபிதாவைத் தொழுவது சாத்தியமாகும். குமாரனால் வெளிப்படுத்தப்பட்டவர்களுக்கும், குமாரத்துவ ஆவியைப் பெற்றவர்களுக்குமே பரமபிதாவை ஆவியோடு வழிபடுவது அமையும். ஆவியில் வழிபடுவதற்கு வழி வகுப்பவரும், கற்பிப்பவரும் கிறிஸ்துவேயல்லாது வேறொருவருமிலர்.

உண்மையோடு வழிபடல் மெய்யாகத் தொழுதுகொள்வது என்று மாத்திரப் இதற்குத் பொருள் இல்லை. அல்லது கடவுள் திருவார்த்தையின் உண்மைப்படி என்று மட்டும் இது பொருள்படாது. இதில் ஆழ்ந்த தெய்வீகப் பொருள் அடங்கியிருக்கிறது. 'கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்த பிதாவின் ஒரே பேறானவரே இயேசு.' 'நியாயப்பிரமாணம் மோசேயினால் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவினால் அருளப்பட்டன.' 'நானே சத்தியமும் ஜீவனும்' என்று இயேசுநாதர் கூறுகிறார். பழைய ஏற்பாட்டில் எல்லாம் நிழலாகவும் வாக்குத்தத்தமாகவுமிருந்தது. அவ்வாறு எதிர்பார்க்கப்பட்ட நம்பிக்கைகளின் சாராம்சமான மெய்ப்பொருளைக் கொண்டுவந்து நமக்கு இயேசு அருளினார்.

அவருக்குள்ளிருக்கும் நித்திய ஜீவனின் ஆசிகளும், வல்லமைகளுமே நமது மெய்யான போக்கிஷமும் அனுபவமுமாகும். இயேசு கிருபையும் சத்தியமும் நிறைந்தவர். சத்தியத்தின் ஆவியே பரிசுத்தாவி. இயேசுவிலுள்ள கிருபை அவர் மூலமாக, செயலிலும் சத்தியத்திலும நம்முடையதாகும். எனவே ஆவியோடுகூடிய ஆராதனை உண்மையோடு கூடிய ஆராதனையாகும். அதுவே நிஜமாகவே கடவுளோடு ஐக்கியப்பட்டு வாழ்வதாகும். ஆவியின் வடிவான பரம பிதாவுக்கும் ஆவியோடு ஜெபிக்கும் தனையனுக்கும் ஏற்படும் மெய்யான இசைவும் தொடர்பும் அதுவே.

இயேசு சமாரிய ஸ்திரீக்குச் சொன்னதை அவள் உடனே விளங்கிக் கொள்ள முடியவில்லை. அதன் முழுப்பொருளையும் விளக்கப் பெந்தேகோஸ்தே அவசியமாயிருந்தது. ஜெபப் பள்ளியில் முதன் முதலாக நாம் பிரவேசிக்கும்போது அத்தகைய போதனையைக் கிரஹித்துக்கொள்ள அவ்வளவாக நாம் தயாராயில்லை. அதனைப் பின்னல்தான் நன்கு விளங்கிக்கொள்வோம். நாம் அவர் தருகிற பாடத்தைப் படிக்க ஆரம்பிப்போமாக. நாம் மாம்ச சுபாவமுடையவர்கள். கடவுள் நாடுகிற உன்னத வழிபாட்டை நாம் செய்யமுடியாது. ஆனல் ஆவியை அருளவே அவதரித்தார். அவர் பரிசுத்தாவியானவரை நமக்கருளியுள்ளார். நாம் ஜெபிக்க ஆரம்பிப்பதற்கு நமது நிலை கிறிஸ்துவின் போதனைப்படியிருப்பதாக கடவுளுக்கு உகந்த ஆராதனையை நாம் செய்யத் திறனற்றவர் என்று மெய்யாகவே அறிக்கை செய்வோமாக. அவரால் கற்பிக்கப்படும்படி நாம் சிறுவரைப் போலாவோமாக. அவரது ஆவியை நம்மீது ஊதும்படிக்கான எளிய விசுவாசம் கொள்வோமாக. எல்லாவற்றிற்கு மேலாக சத்தியத்தைப் பற்றிக்கொள்வோமாக. அதைப்பற்றி ஆண்டவர் அதிகம் போதிப்பதைக் காண்போம். கடவுளின் பிதாத்துவத்தைப்பற்றிய அறிவையும், அவரது எல்லையற்ற தந்தைத் தன்மையை நம் இருதயங்களில் வெளிப்படுத்துவதையும், தமது குமாரனையும், தமது பரிசுததாவியையும் நமமைப் பிள்ளைகளாக்கும்படி கொடுக்கிற அவரது எல்லையற்ற அன்பில் வைக்கும் விசுவாசத்தையும் அடைவதே ஆவியோடும் உண்மையோடும் செய்யும் ஜெபத்தின் இரகசியம் என்பதற்கு ஐயமில்லை. இதுவே கிறிஸ்துவால் நமக்குத் திறக்கப்பட்ட புதிய, உயிருள்ள வழியாகும். குமாரனுகிய கிறிஸ்துவையும் திருக்குமாரனின் ஆவியையும் நமக்குச் சொந்தமாக்கிக் கொள்வதும், அவர் நமக்குள் வசித்து, பரமபிதாவை நமக்கு வெளிப்படுத்துவதுமே நம்மை உண்மையான ஆத்மீக ஆராதனை செய்பவராகச் செய்கிறது.

'ஆண்டவரே ஜேபிக்க எங்களுக்குப் போதித்தருளும்'

Lenox Press, Pasumalai 28--11--'53. 475 c.